# தேசமும் நமது பொறுப்பும்!



**சுதந்திர தின சிறப்புக் கட்டுரை**

நம்முடைய இந்தியத் திருநாட்டின் 71 வது சுதந்திர தினத்தை நாம் கொண்டாடவிருக்கிறோம். அந்நிய ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து இந்த தேசத்தை மீட்டெடுத்த வரலாற்று நிகழ்வை நினைவு கூர்வதில் எல்லோரையும் விட முஸ்லிம்களாகிய நமக்கு அதிகம் உற்சாகம் இருக்க வேண்டும். காரணம் இந்திய சுதந்திரப் போராட்ட வரலாற்றில் எல்லோரையும் விட அதிக அர்ப்பணிப்புகளையும், உயிர் தியாகங்களையும், சேவைகளையும் செய்தவர்கள் நாம்.

இந்த போராட்ட உணர்வு என்பது ஏதோ சுதந்திர போர் காலகட்டத்தில் முஸ்லிம்களிடம் உருவானதல்ல; மாறாக அநீதங்களையும், அக்கிரமங்களையும் எதிர்த்து நின்று செயலாற்ற வேண்டுமென முஸ்லிம்கள் பாரம்பரியமாகவே போதனை வழங்கப்பட்டுள்ளார்கள். இதற்கு இஸ்லாத்தின் தூய வழிகாட்டுதல்கள் அஸ்திவாரமாக அமைந்தன.

ஆனால் சமகால இந்திய தேசத்தில் ஒவ்வொரு இஸ்லாமியனும் தனது தேசப்பற்றை நிரூபிக்க வேண்டிய நிலைக்கு துரதிஷ்டவசமாக தள்ளப்பட்டுள்ளனர். இந்த அவலமான நிலையை ஃபாசிசமும், சங்பரிவார சக்திகளும் திட்டமிட்டே உருவாக்கியிருக்கிறார்கள்.

இதற்குச் சான்றாக ஒரு நிகழ்வை இங்கே நினைவுபடுத்தலாம்.

கடந்த 2013 மார்ச் மாதம் 45 வயதான செய்யது லியாகத் ஷா என்பவர் மனைவி மற்றும் மகளோடு டெல்லி போலீஸாரால் கைது செய்யப்பட்டார். ஹோலி கொண்டாட்டத்தின் போது சில குண்டு வெடிப்புகளை நடத்த திட்டமிட்டார் என்பதே இவர் மீது வைக்கப்பட்ட குற்றச்சாட்டாகும். இதனை விசாரணை செய்த தேசிய புலனாய்வு அமைப்பான என்.ஐ.ஏ 2015 ஜனவரியில் லியாகத் ஷா நிரபராதி என அறிவிப்புச் செய்கிறது.

(**நூல் ஆதாரம்** : **BEING THE OTHER & THE MUSLIM IN INDIA**)

இது மற்ற சில நிகழ்வுகளை கவனித்து சாதாரணமாகிப் போன நிகழ்வுதான் என்றாலும் இந்த தேசத்தில் அடிக்கடி நிகழ்த்தப்படும் நிகழ்வுகளாக மாறிப் போயிருக்கிறது.

முஸ்லிம்களை சந்தேகக் கண் கொண்டு பார்க்கப்படும் நிலையை உருவாக்கி தேச துரோகிகளாகவும், ஒற்றர்களாகவும், நிரபராதிகளை குற்றவாளிகாகவும் மாற்றக்கூடிய முயற்சி கனகச்சிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

முஸ்லிம்களை நீங்கள் சந்தேகத்திற்குரியவர்களாகவும், தேச துரோகிகளாகவும்தான் பார்க்க வேண்டும் என்கின்ற சிந்தனை மக்களிடையே பலவந்தமாக திணிக்கப்படுகிறது.

முழுக்க அநீதம் நிறைந்த இந்த அணுகுமுறைகளால் தேசத்துடன் மோதல் போக்கில் ஈடுபடும் முஸ்லிம்களை உருவாக்கவே கயவர்கள் முயற்சிக்கிறார்கள். இப்படிப்பட்ட மாபாதக சூழ்ச்சிகளால் முஸ்லிம்களிடம் ஏற்பட்ட இழப்புகள் ஏராளம்; ஏராளம்.

முஸ்லிம்கள் சுயமாகவே தாங்கள் அந்நியர்தானே என்று சிந்திக்கும் நிலைக்கு தள்ளப்பட்டனர்.

தாங்கள் வெளிநாட்டிலிருந்து வந்தவர்கள், பலம் பிரயோகித்து இஸ்லாத்தை பிரச்சாரம் செய்தவர்கள்; நாட்டின் பிரிவினைக்கு காரணமானவர்கள் - இப்படிப்பட்ட சிந்தனைகளை முஸ்லிம்களிடம் உருவாக்குவதுடன் அரசு எந்திரங்களின் மூலம் வரலாற்றையே மாற்றியமைக்கும் சூழல் உருவாகியுள்ளது. இப்படிப்பட்ட சூழல்களின்

அடிப்படையிலேயே முஸ்லிம்கள் தங்களது தேசப்பற்றை நிரூபிக்கக்கூடிய நிலைக்கு தள்ளப்படுகின்றனர்.

## ஹிந்துத்துவ தேசியவாதமே இலக்கு

நாம் வாழக்கூடிய இந்திய திருநாடு பல்வேறு சிறப்பம்சங்களை உள்ளடக்கியது. பல்வேறு இனம், கொள்கை, மொழி என எல்லாவித மக்களையும் உள்ளடக்கிய ஒரு ஜனநாயக தேசம். இஸ்லாமியர்கள் உட்பட எல்லா மக்களும் ஒன்றிணைந்துதான் இந்த தேசத்தின் வளர்ச்சியில் பங்கெடுத்துள்ளார்கள் என்பதே வரலாறாகும்.

ஆனால் இந்த அழகான அமைப்பை மாற்றியமைக்க வேண்டும் என்ற மோசமான சிந்தனையுடன் உருவானவர்கள்தான் ஃபாசிச சங்பரிவார சக்திகள். ஹிந்துத்துவம் என்ற பெயரில் ஒரே வழிபாட்டுமுறை, இந்த நாட்டின் பன்முகத்தன்மையை பாழ்படுத்தும் பல்வேறு அணுகுமுறைகள் என ஓர் ஆபத்ததான தேசியவாதத்தையே பாசிச சங்பரிவாரங்கள் நிலைநிறுத்த முயற்சிக்கின்றனர். இம்முயற்சி கடந்த ஒரு நூற்றாண்டாக திட்டமிட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சமகால ஆட்சியதிகார பலங்களை வைத்துக் கொண்டு இந்த இலக்கை அடைந்திட மக்கள் பலவந்தமாக வற்புறுத்தப்படுகிறார்கள். இவர்களது ஹிந்துத்துவ தேசியவாதத்தை நிலைநிறுத்திட வேண்டுமென்பதற்காக, நாட்டிற்காக எண்ணிலடங்கா அர்ப்பணிப்புகளைச் செய்த முஸ்லிம்களை அந்நியர்களாக சித்தரிக்க முயற்சிக்கின்றனர்.

இந்தியாவை ஆக்கிரமித்த ஆங்கிலேய அந்நிய சக்திகளை விடவும் முஸ்லிம்களை மோசமானவர்களாக பிரச்சாரம் செய்கின்றனர். இதன் மூலம் கயவர்களின் இலக்கான 'ஹிந்து ராஷ்ட்ரம்' என்ற கனவு இலகுவாகும் என்பதே அவர்களது எதிர்ப்பார்ப்பாகும். சூழ்ச்சிகள் நிறைந்த இப்படிப்பட்ட முயற்சிகள் கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டை நிறைவு செய்ய இருக்கிறது என்பதை நாம் நன்கு நினைவில் நிறுத்த வேண்டும்.

## அந்நியர்களாக்கும் முயற்சிக்கு அடித்தளமிட்டவர்கள் காலனிய சக்திகள்

தேசத்தை பாதுகாக்கும் முயற்சியில் ஆங்கிலேய ஆக்கிரமிப்பாளர்களை முன்னின்று முழுமையாக தியாக உணர்வுடன்

எதிர்கொண்டவர்கள் முஸ்லிம்கள்.

இதனை புரிந்து கொண்ட காலனியாதிக்க சக்திகள் முஸ்லிம்கள் தேசப்பற்று இல்லாதவர்கள் என்ற பரப்புரையை செய்ய ஆரம்பித்தனர். இதற்காக இந்து – முஸ்லிம் பிரிவினைகளை ஏற்படுத்த திட்டமிட்டனர். இந்திய முஸ்லிம்களின் தேசப்பற்றை சந்தேதிக்க இந்தியர்களிலிருந்தே ஆட்களை உருவாக்கினர். காலனியாதிக்க சக்திகளின் இப்படிப்பட்ட சூழ்ச்சியினை தங்களுக்கு சாதகமாகவே ஹிந்துத்துவ சங்பரிவார சக்திகள் கருதினர். சுதந்திரத்திற்கு முன்பாக இந்து திருவிழாக்களின் வழியே நிகழ்த்தப்பட்ட கலவரங்கள் இதன் பிண்ணனியிலேயே நிகழ்ந்தவையாகும்.

இவ்வளவு சூழ்ச்சிகளின் பின்னணியில்தான் நாம் நமது தேசத்தின் 71வது சுதந்திர தினத்தை எதிர் கொள்ளவிருக்கிறோம். எனவே ஓர் இந்தியனாகவும், இஸ்லாமியனாகவும் நமது தேசத்துடனான தொடர்பை எவ்வாறு அமைத்துக் கொள்ள வேண்டும்? நமது முன்னோர்களால் பாதுகாக்கப்பட்ட இந்த தேசம். சமகாலத்தில் எப்படிப்பட்ட சவால்களை சந்தித்துக் கொண்டிருக்கிறது? என்பனவற்றையெல்லாம் ஆய்வு செய்திட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

## இந்திய தேசமும், இஸ்லாமியர்களின் பொறுப்பும்

இந்த தேசத்தின் மீதான பொறுப்புகளை நிறைவேற்ற கடமைப்பட்டவர்களே முஸ்லிம்கள். இந்த நாட்டின் அரசியலமைப்பு என்பது மனிதர்களால் உருவாக்கப்பட்டது என்ற போதிலும் அதன் தாத்பரியங்களை ஏற்று நடப்பதில் தவ்ஹீதை அடிப்படையாகக் கொண்டு வாழும் முஸ்லிம் சமூகத்திற்கு இது விஷயத்தில் எவ்விதச் சிரமங்களும் இல்லை.

அல்லாமா இக்பால் (ரஹ்) அவர்கள் இது விஷயத்தில் ஓர் அழகான ஆய்வை வெளிப்படுத்துகிறார்கள் ;

தவ்ஹீதுடைய சாரம்சம் சுதந்திரம், சமத்துவம், ஐக்கியம் போன்ற அடிப்படைகளை உள்ளடக்கியதுதான். இந்த அடிப்படைகளை நடைமுறைப்படுத்துவதில் இடம், காலம். சூழல்கள் ஆகியவற்றிற்கு

தக்கவாறு மாற்றுவதே இஸ்லாத்தின் நோக்கமாகும்.

**(Reconstruction of Religious Thought in Islam - Dr.Allama Iqbal)**

இஸ்லாமியப் பார்வையில் ஒரு தேசம் என்பது மக்களின் வளர்ச்சி மற்றும் நலன்களில் அக்கறை செலுத்துவதாக இருக்க வேண்டும். அந்த வகையில் கல்வி, வேலை வாய்ப்பு, ஆரோக்கியம், பாதுகாப்பு, கண்ணியம் பாதுகாக்கப்படுதல் என எல்லா துறைகளிலும் நாம் பங்கேற்க வேண்டும். இதில் எப்படிப்பட்ட தடைகளையும் எதிர் கொள்ள வேண்டும்.

இந்த தாத்பரியத்தை புரிந்து கொண்டதன் விளைவாகவே நமது முன்னோர்கள் தேசத்தின் எதிரிகளுக்கு எதிராக போராடினார்கள்; தேசத்தை கட்டமைப்பதில் பங்கேற்றார்கள்.

அரசியல், ஆட்சியதிகாரங்கள் அனைத்தும் படைப்புகளுக்கு நலன் பயப்பதாக அமைய வேண்டுமென்பதே குர்ஆனுடைய வழிகாட்டுதலாகும்.

குர்ஆன் கூறுகிறது ;

إِنَّ الْأَرْضَ لِلَّهِ يُورِثُهَا مَنْ يَشَاءُ مِنْ عِبَادِهِ ۖ وَالْعَاقِبَةُ لِلْمُتَّقِينَ

நிச்சயமாக! இந்த பூமி அல்லாஹ்வுக்கே சொந்தம். தன் அடியார்களில் தான் நாடியவர்களுக்கு அவன் அதை உரியதாக்கி விடுகிறேன். இறுதி வெற்றி பயபக்தியுடையவர்களுக்கே கிடைக்கும்.

**(அல்குர்ஆன் - 7 : 128)**

ஆட்சியாளர்கள் இறைவனின் பிரதிநிதிகளாச் செயல்பட வேண்டுமென்பதே இஸ்லாத்தின் கொள்கையாகும். குடிமக்களை பாதுகாக்கும் பாதுகாவலர்தான் நாம் என்ற எண்ணம் ஆட்சியாளருக்கு இருக்க வேண்டும். ஆனால் அந்நிய ஆக்கிரமிப்பாளர்கள் இந்த தேசத்தை கைப்பற்றிடும் முயற்சியில் ஆட்சியாளர்கள் என்றாலே அதிகாரம் செலுத்துபவர்களாகவும், அடக்குமுறையை பிரயோகிப்பவர்களாகவும் இருந்திட வேண்டும் என்ற சிந்தனைப் போக்கை உருவாக்கினர்.

இதற்கு உதாரணமாக ஒரு செய்தியை கூறலாம். 15 ஆம்

நூற்றாண்டில் இந்தியாவிற்கு வந்த போர்த்துக்கீசியர்கள் உலகிலேயே முதன் முறையாக கடலுக்கு நாங்கள்தான் அதிபர்கள். கடல் எங்களுக்கே சொந்தம் என்ற கருத்தை பிரகடனப்படுத்தினர்.

ஆனால் இது விஷயத்தில் இஸ்லாத்தின் வழிகாட்டுதல் மக்களின் நலனை அடிப்படையாகக் கொண்டதாகும்.

**சம்பவம் :**

நபி (ஸல்) அவர்கள் அபூமூஸா (ரளி) அவர்களையும், முஆது இப்னு ஜபல் (ரளி) அவர்களையும் யமன் தேசத்திற்கு அதிகாரிகளாக தேர்வு செய்து அனுப்பிய போது பின்வரும் உபதேசத்தை செய்தார்கள் ;

يَسِّرُوْا وَلَا تُعَسِّرُوْا بَشِّرُوْا وَلَا تُنَفِّرُوْا

எளிதாக நடந்து கொள்ளுங்கள் ; (அவர்களைச்) சிரமப்படுத்திவிடாதீர்கள். (நற்செய்திகளைக் கூறி) அமைதிப்படுத்துங்கள். (எச்சரிக்கும் போது கூட) வெறுப்பேற்றி விடாதீர்கள்.

**- முஸ்லிம்**

இது போன்றுள்ள செய்திகளனைத்தும் இந்திய தேசத்தின் அரசியலமைப்புக்கு அடித்தளம் வகிக்கும் கொள்கையாக இஸ்லாம் அமைந்துள்ளது என்பதை பறைசாற்றுகின்றன. எனவே இந்திய சுதந்திரப் போராட்ட வரலாற்றில் முஸ்லிம்கள் முன்னணியில் நின்று அர்ப்பணிப்புகள் பல செய்ததற்கு இஸ்லாமிய வழிகாட்டுதல்கள் அடிப்படையாக அமைந்தன என்பதை நாம் மனதில் நிறுத்த வேண்டும்.

## இந்தியாவில் இஸ்லாத்தின் வருகையும், அதன் பின்னணியும்

இந்தியாவிற்குள் இஸ்லாம் தாக்குதல் ரீதியாக நுழைந்தது என்ற கருத்து முற்றிலும் தவறானதாகும். அது மட்டுமல்லாமல் இஸ்லாமிய வருகையின் போது இந்திய மக்களின் வாழ்வியல் நிலைகள் முற்றிலும் கடினமான கலாச்சாரங்களையும், நம்பிக்கைகளையும் உடையதாகவே அமைந்திருந்தன. சமத்துவம், வணக்க வழிபாட்டு முறை, கடவுள் நம்பிக்கை என அடிப்படையான அனைத்தும் அப்போதைய மக்களுக்கு முறையற்றதாகவே அமைந்தன. இந்நிலையில்தான் இந்த தேசத்திற்கு

வருகை தந்த முஸ்லிம்கள் தாங்கள் ஏற்று நடந்து கொண்டிருக்கும் வாழ்வியல் நெறிமுறைகளை அம்மக்களுடன் பரஸ்பரம் பகிர்ந்து கொள்கின்றனர்.

இஸ்லாமியர்கள் எடுத்துச் சொன்ன செய்திகள் இந்திய மக்களுக்கு கண்ணியத்தையும், சமத்துவத்தையும், சுதந்திரத்தையும் ஏற்படுத்துவதாக உணர்ந்தார்கள். பெண்களுக்கு மகத்தான கண்ணியங்களை இஸ்லாமிய மார்க்கம் வழங்குகிறது என்பதையும் விளங்கிக் கொண்டார்கள்.

இவை மட்டுமல்லாமல் மொகலாயர்கள், பாரசீகர்கள், துருக்கியர்கள் என இஸ்லாமியர்களின் பல்வேறு துறைசார்ந்த செயல்பாடுகள் இந்திய மக்களை மிகவும் ஈர்த்தன. அந்த வகையில் இஸ்லாமியர்கள் நடைமுறைப்படுத்திய பல்வேறு நாகரீகங்களை சுருக்கமாகக் காண்போம்.

- சுத்தம் – தூய்மை – அழகுணர்ச்சி போன்றவைகள் உருவாகின.
- உணவுக்காக இலைகளுடன் பாத்திரங்களையும் உபயோகப்படுத்தும் முறை அறிமுகம் செய்யப்பட்டது.
- கண்ணியமான ஆடைகள் உடுத்த பழக்கமாக்கப்பட்டனர்.
- மொகலாயர்கள் வெளிநாட்டிலிருந்து பழங்களையும், அழகான மரங்களையும் கொண்டு வந்தனர்.
- அழகான வீடுகள் கட்டுவதற்கான கட்டிடக் கலைகள் அறிமுகம் செய்யப்பட்டன.
- உர்தூ மொழியின் மூலம் இலக்கிய வளம் உருவானது.
- ஒரு புதிய கலாச்சாரமே உருவானது.
- ஆட்சி நிர்வாகத்தில் புதிய சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன.
- தனிமைப்பட்டுக்கிடந்த இந்தியா வெளியுலகத்தோடு தொடர்பு கொள்ளத் துவங்கியது.
- அழகான உரையாடல் முறை உருவானது.

- கடல் வாணிபத்தின் மூலம் பொருளாதார வளம் பெருகியது; வர்த்தக உற்பத்தி அதிகரித்தது.
- கடற்படை உருவானது.
- சமூக நாகரீகம், அரசியலமைப்பு முறை, வாழ்வியல் நடைமுறைகள் ஆகியவற்றில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன.

இந்தியாவில் இஸ்லாமியர்களுடைய வருகையினால் மேற்கூறப்பட்ட பல்வேறு சன்மானங்களை இந்த தேசத்து மக்கள் அடைந்து கொண்டதன் பலனாக இஸ்லாமியர்களது பிரச்சாரம் இந்திய மக்களை வெகுவாக கவர்ந்ததுடன் இஸ்லாத்தை நோக்கி அவர்கள் வருவதற்கும் காரணமாக அமைந்தது.

இப்படிப்பட்ட அற்புதமான அணுகுமுறைகளாகலேயே இந்த தேசத்தின் பூர்வ குடிமக்களாக முஸ்லிம்கள் மாறிப்போயினர். தங்களிடமிருந்த அறிவு, ஆற்றல்களை இந்த தேசத்தின் நலன்களுக்காக வெளிப்படுத்தியது மட்டுமல்லாமல் இந்த தேசத்தின் பாதுகாப்பிலும் முஸ்லிம்கள் கவனம் செலுத்தினர். இந்த தேசத்தின் நலன்களுக்கு அச்சுறுத்தலாக அமைவோரை எதிர்த்து நின்று பல அர்ப்பணிப்புகளைச் செய்திட முன்வந்தனர் முஸ்லிம்கள். அந்த வகையில்தான் இந்த தேசத்தை சுரண்டி ஆக்கிரமிக்க வந்த அந்நிய ஆங்கிலேயே ஏகாதிபத்ய சக்திகளை சர்வ வல்லமையுடன் முறியடிக்க முஸ்லிம்கள் முன்னணியில் நின்றனர். அதில் முஸ்லிம்களின் அர்ப்பணிப்புகளும், தியாகங்களும் எண்ணிலடங்காதவையாகும்.

## ஆங்கிலேயே ஏகாதிபத்தியத்திற்கு எதிராக முஸ்லிம்கள்

ஆங்கிலேயே ஆக்கிரமிப்பாளர்களை தடுத்து நிறுத்தி போராடியவர்களில் முஸ்லிம்கள் எப்போதுமே முன்னணியில் நின்றனர். இதில் மக்தூம்கள், மரைக்காயர்கள், மாப்பிள்ளைமார்கள், மார்க்க அறிஞர்கள் என பல பிரிவினர்களும் பிரிட்டிஷாருக்கு எதிராக போராடியுள்ளனர்.

இப்படிப்பட்ட போராட்டங்களுக்கு உலமாக்களிலும், உமராக்களிலும் பலரும் வித்துக்களாக அமைந்தனர். அவர்களில்

சிலருடைய பெயர்களை மட்டும் இவ்விடம் நாம் ஞாபகப்படுத்திக் கொள்வோம்.

**ஷஹீது திப்பு சுல்தான் (ரஹ்).**

**முகலாய மன்னர் பகதூர் ஷா ஜஃபர்.**

**செய்யது அஹ்மது ஷஹீது.**

**மௌலானா அஹ்மதுல்லாஹ்.**

**பேகம் ஹஜ்ரம் மஹல்.**

**ஷாஹ் அப்துல் அஜீஸ் தெஹ்லவி.**

**அஷ்ரஃப் அலி தானவி (ரஹ்).**

**மௌலானா முஹம்மது காஸிம் நானோத்தவி.**

**கான் பகதூர் கான்.**

**பீர் அலி.**

இது போன்றுள்ள நபர்களின் பட்டியல் இந்நாட்டின் சுதந்திரத்திற்கு அர்ப்பணித்தவர்கள் எனும் அடிப்படையில் இன்னும் நீளுகிறது.

இவை மட்டுமல்லாது கிலாஃபத் இயக்கம் தீவிரமடைந்த போது மௌலானா முஹம்மது அலி, ஷவ்கத் அலி உள்ளிட்ட மார்க்க அறிஞர்கள் பல்வேறு சோதனைகளை அனுபவித்தனர்.

இப்படிப்பட்ட அர்ப்பணிப்பு, தியாகங்கள் அனைத்தும் அடிப்படையில் இஸ்லாத்தின் அற்புத வழிகாட்டல்களின் மூலமுள்ள வெளிப்பாடுகளேயாகும். இந்த தேசத்தின் மீது அக்கறை கொண்டு தேசத்தின் மக்களுக்காக சேவையாற்ற வேண்டும் என்பதுடன் மக்களின் நல்வாழ்விற்கும், தேசத்தின் நலனுக்கு தடையாக உள்ளவற்றை துடைத்தெறிய வேண்டுமென்பதும் இஸ்லாத்தின் அடிப்படையான போதனைகளாகும்.

**சுதந்திரப் போர் வரலாற்றில் சமகால முஸ்லிம்களின் சிந்தனைக்கு...**

- இந்தியா - பாகிஸ்தான் பிரிவினைக்கு முஸ்லிம்கள்

காரணமானவர்கள் என்ற தாழ்வு மனப்பான்மை கூடாது.

•நாம் வெளிநாட்டிலிருந்து வந்தவர்களல்ல ; இந்நாட்டின் பூர்வீக குடிமக்கள்தான்.

•இங்கு நடந்த இஸ்லாமியப் பிரச்சாரம், மார்க்கப் பரப்புரையின் அடிப்படையிலேயே நிகழ்ந்தது என்பதுடன் இஸ்லாமியர்களின் அற்புதமான நடைமுறைகளினாலும் மக்கள் இஸ்லாத்தின்பால் ஈர்க்கப்பட்டனர்.

•நம்முடைய முன்னோர்கள் பலம் பிரயோகித்து இஸ்லாத்தை பரப்புரை செய்தவர்களல்ல! பண்புகளால் முழுவதும் ஈர்க்கப்பட்டவர்கள்.

**இறுதியாக...**

எண்ணிடலங்கா தடைகள் வந்த போதிலும் நிலை குலையாமல் அந்நிய ஆதிக்க சக்திகளை முழு மூச்சுடன் எதிர்த்து நின்றவர்கள் நமது முன்னோர்கள். காரணம் தேச நலன் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக.

ஆனால் இன்றோ நமது நாட்டிற்கு மிகப்பெரும் அச்சுறுத்தலாக பாசிச சங்பரிவார சக்திகள் உருவெடுத்துள்ளன. சங்பரிவார மற்றும் அதன் வகைராக்களின் அச்சுறுத்தல்கள் மறறும் அழிச்சாட்டியங்களை தவிடு பொடியாக்குவதே நாட்டைக் கட்டமைத்த நமது முன்னோர்களின் வழிமுறையாகும்.

இன – மத பேதங்களின்றி ஒன்றிணைந்து நமது முன்னோர்கள் நிகழ்த்திய சுதந்திரப் போராட்ட வரலாற்றுச் சம்பவங்களை நினைவு கூறும் இந்த சுதந்திரத் திருநாளில் பல உயிர்களையும், பொருட்களையும் அர்ப்பணித்து பெற்ற சுதந்திரத்தை சமகால சங்பரிவார சதிகாரர்களிடமிருந்து காப்பாற்ற வேண்டியது ஒவ்வொரு இஸ்லாமியனின் மற்றும் இந்தியக் குடிமகனின் அதிமுக்கியக் கடமையாகும்.